



புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






செவ்வாய் ❖ செப்டம்பர். 13, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 5 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 335 ❖ ரூ.10

### ஷாங்காய் மாநாட்டில் சீன அதிபரை இந்திய பிரதமர் சந்தித்துப் பேச வாய்ப்பு

# முக்கியத்துவம்

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 22-வது மாநாடு உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரில் வரும் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது

புதுடெல்லி , செப்-13

உஸ்பெகிஸ்தானில் நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டின்போது, சீன அதிபரையும், பாகிஸ்தான் பிரதமரையும் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேச வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



இந்தியா, சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 8 நாடுகளை உறுப்பு நாடுகளாகக் கொண்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 22-வது மாநாடு உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரில் வரும் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

உஸ்பெகிஸ்தான் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ்-ன் அழைப்பை ஏற்று மாநாட்டில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி சமர்கண்ட் செல்ல இருக்கிறார். இந்த மாநாட்டில் சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் உள்ளிட்டோரும் பங்கேற்பார்கள் என தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கு முன்பு கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்ற மாநாடுகள் கொரோனா பெருந்தொற்று காரணமாக ஆன்லைன் முறையில் நடைபெற்றன. இதனால், 2 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக உறுப்பு நாடுகளின் தலைவர்கள் நேரில் சந்திக்க உள்ளனர்.

கடந்த 2020-ல் லடாக்கில் இந்திய - சீன ராணுவ வீரர்களிடையே மோதல் ஏற்பட்டதை அடுத்து இரு தரப்பு உறவில் பின்னடைவு ஏற்பட்டது. இதன் காரணமாக லடாக் எல்லையில் இரு நாடுகளும் ராணுவத்தைக் குவித்தன. போர் பதற்றமும் உருவானது. எனினும், இரு நாட்டு ராணுவ அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, அங்கு நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. கிழக்கு லடாக்கின் முக்கிய முனைகளில் ஒன்றான கோக்ரா-ஹாட்ஸ்பிரிங்ஸ் பகுதியில் இருந்து இரு நாட்டு ராணுவமும் படைகளை திரும்பப்பெற ஒப்புக்கொள்ளப்பட்டது. இதையடுத்து, கடந்த 8ம் தேதி முதல் படைகளை திரும்பப் பெறும் நடவடிக்கை தொடங்கியது.

இந்நிலையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்து பேச வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதேபோல், பாகிஸ்தானின் புதிய பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் ஆகியோருடனும் பிரதமர் மோடி சந்தித்துப் பேச வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்த கேள்விக்கு பதில் அளித்த இந்தியாவுக்கான உஸ்பெகிஸ்தான் தூதர் மணிஷ் பிரபாத், மாநாட்டின் இடையே சில நாடுகளுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற இருப்பதாகக் கூறினார். எந்தெந்த நாடுகளுடன் இந்த இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் என்பது இன்னும் முடிவாகவில்லை என அவர் தெரிவித்தார். முடிவான உடன் அது குறித்து அறிவிக்கப்படும் என்றும் மணிஷ் பிரபாத் கூறினார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில், விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்குகின்ற 19 வீரர், வீராங்கனைகள், பயிற்றுநர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் நடுவர்களுக்கு முதலமைச்சர் விருதினையும், அதற்கான ஊக்கத்தொகையாக 16 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி வாழ்த்தினார். இந்த விழாவில் அமைச்சர்கள் சேகர்பாபு, மெய்யநாதன், மாநகர மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் அசோக் சிகாமணி, தலைமைச் செயலாளர் இறையன்பு, விளையாட்டுத்துறையின் முதன்மை செயலாளர் அபூர்வா, விளையாட்டுத்துறையில் செயல் அலுவலர் உறுப்பினர் செயலர் கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மின் கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி

# செப்டம்பர்16ம் தேதி அதிமுக ஆர்ப்பாட்டம் இபிஎஸ் அறிவிப்பு

சென்னை , செப்-13

மின் கட்டண உயர்வை கண்டித்தும், மின் கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தியும் வரும் 16-ம் தேதி வெள்ளிக்கிழமை அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், " விடியும், விடியும் என்று சொல்லி மக்களை இருளில் மூழ்கடிக்கக் கூடிய செயல்களை மட்டுமே தொடர்ந்து செய்து வருகிறது இந்த திமுக அரசு. எதிர்க்கட்சி வரிசையில் திமுக அமர்ந்திருந்தபோது, 10 ஆண்டுகளாக எதைச் சொல்லியும் மக்களை திசை திருப்ப முடியவில்லை என்ற எண்ணத்தை உள்வாங்கி, பொய்யைச் சொல்லி மக்களை திசை திருப்பலாம் என்று எண்ணி, திமுக பல பொய்யான தேர்தல் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து, புறவாசல் வழியாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது.

மின் கட்டணத்தையோ, பேருந்து கட்டணத்தையோ, பால் விலையையோ, உயர்த்தமாட்டோம் என்று சொல்லி ஆட்சியில் அமர்ந்தவர்கள், வாக்குறுதிகளை காற்றில் எழுதியதாக, உண்மைகளை தண்ணீரில் எழுதியதாகக் கருதி, தற்போது மின் கட்டணத்தை உயர்த்தி, ஏற்கெனவே மிகப் பெரிய துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் தமிழக மக்களை, அவர்களுடைய தலையில் ஆயிரம் செந்தேள்கள் கொட்டியதைப் போல, கடுமையான துயரத்தையும், வலியையும் ஏற்படுத்துகின்ற விதமாக, ஒவ்வொரு ஆண்டும் மின் கட்டணத்தை உயர்த்தும் என்பதையும் சொல்லி, மின் கட்டணத்தை உயர்த்தி அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த உயர்வு இம்மாதத்தில் இருந்தே அமலுக்கு வரும் என்ற அதிர்ச்சிகரமான செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள்.

திமுக எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது, மின் கட்டண உயர்வுக்கு அதிமுக அரசு எந்தவிதமான முயற்சியையும் எடுக்காதபோதே, மின் கட்டணத்தை உயர்த்திவிடுவார்கள் என்று பொய்யான பரப்புரையை ஏற்படுத்தி, அதற்கு எதிராக தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுத்த திமுக, இன்றைக்கு ஆளுங்கட்சியாக வந்த பிறகு மக்கள் நலனை மறந்து இதுபோன்றதொரு மின் கட்டண உயர்வை அறிவித்திருக்கிறது.

"மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார். தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்'' என்ற எம்ஜிஆரின் பாடல் வரிகளுக்கேற்ப, ஆட்சியில் இல்லாதபோது, 'மக்கள் நலம், மக்கள் நலம்' என்று கபட நாடகத்தை அரங்கேற்றிய திமுக, ஆட்சிக்கு வந்தபிறகு தம் மக்கள் நலனை மட்டுமே பிரதானமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஜெயலலிதாவின் நல்லாசியோடு செயல்பட்ட அதிமுக ஆட்சியில் மின் கட்டணம், பால் விலை, பேருந்து கட்டணம், சொத்து வரி உள்ளிட்ட எதையுமே உயர்த்தாமல், மக்கள் நலனை மட்டுமே பிரதானமாகக் கொண்டு மடிக் கணிணி, மிதிவண்டி, தாலிக்கு தங்கம், திருமண நிதியுதவி தொகை, மகப்பேறு நிதியுதவித் தொகை, பள்ளி செல்லும் மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அனைத்தையும் வழங்கிய அரசு அதிமுக அரசு.

மாறாக இந்த திமுக அரசு, அதிமுக அரசில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை முடக்கியதோடு, சொத்து வரியையும், மின் கட்டணத்தையும் உயர்த்தி, இன்றைக்கு மேலும் மக்களை துன்பக் கடலில் ஆழ்த்தி, என்றைக்குமே விடியாது என்ற நிலைக்கு இந்த அரசு சென்று கொண்டிருப்பதை உணர்த்துகிறது.

"மின் கட்டணத்தை உயர்த்தி மக்களை பெரும் துன்பத்திற்கு ஆளாக்கியுள்ள திமுக அரசைக் கண்டித்தும், அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வை உடனடியாக திரும்பப்பெற வலியுறுத்தியும்'' அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அமைப்பு ரீதியாக செயல்பட்டுவரும் அனைத்து மாவட்டங்களிலும், 16-ம் தேதி வெள்ளிக் கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

மக்களை பல்வேறு வகைகளில் வாட்டி வதைக்கும் இந்த திமுக அரசைக் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டங்களில் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்துகொண்டு ஆதரவு நல்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற 16ம் தேதியன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் 114-ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள் 22ம் தேதி வியாழக்கிழமை நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## காவேரி–வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு குழுக் கூட்டம்

புதுக்கோட்டை, செப்-13

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், காவேரி-வைகை-குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டத்தின்கீழ், மாவட்ட அளவிலான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு தலைமையில், திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் முன்னிலையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவேரி வைகை குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டத்திற்காக விராலிமலை, குளத்தூர் மற்றும் புதுக்கோட்டை தாலுகாக்களுக்குட்பட்ட 21 கிராமங்களில் 474.83 ஹெக்டேர் பட்டா நிலங்களை கையகப்படுத்தவும், 150.60 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் செய்யப்படவுள்ளது.

மேற்கண்ட திட்டத்திற்காக 19 கிராமங்களில்நில அளவை பணிகள் முடிவுற்று முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும்இத்திட்டத்திற்காக நிலம் கையகம் படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் 2013 (மத்திய சட்டம் 30/2013)-ன் படியும் மற்றும் தனி நபர் பேச்சுவார்த்தை மூலமும் நிலம் கையகப்படுத்தப்படுகிறது.

அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டத்திற்காக தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் குன்னத்தூர், புலியூர், வத்தனாகுறிச்சி, வாலியம்பட்டி, சீமானூர் மற்றும் பூங்குடி ஆகிய வருவாய் கிராமங்களில் இதுவரை 6 கட்டங்களாக 43.19 ஹெக்டேர் நிலங்கள் ரூ.44.15 கோடி மதிப்பிற்குகையகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக விராலிமலை தாலுகா, குன்னத்தூர் கிராமத்தில் நீர்வளத்துறை மூலம் கால்வாய் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

விராலிமலை தாலுகா குன்னத்தூர், குளத்தூர் தாலுகா புலியூர் மற்றும் வத்தனாக்குறிச்சி கிராமங்களில் நிலமெடுப்பு செய்வதினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இடமாற்றம் செய்யப்படவுள்ள 25 குடும்பங்கள் ஆகியவற்றிற்கான மறுவாழ்விற்காக, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்ட நிருவாகி/இலுப்பூர்வருவாய் கோட்டாட்சியரால் திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, கருத்துக் கேட்புக்கூட்டம் நடத்தப்பட்டு, அதனடிப்படையில் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியரால் சமர்பிக்கப்பட்ட மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான இறுதி திட்ட வரைவு அறிக்கையினை பரிசீலனை செய்து மாநில மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆணையர் / நில நிர்வாக ஆணையர், சென்னை ஒப்புதலுக்கு அனுப்பும் பொருட்டு மாவட்ட அளவிலான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு குழுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

மேலும் மேற்கண்ட காவேரிவைகைகுண்டாறு இணைப்புக் கால்வாய் திட்ட பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது என திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் காவேரி-வைகை-குண்டாறு ஆர்.ரம்யாதேவி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அதிமுக அலுவலக சாவி வழக்கு ஓபிஎஸ் மனுவை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி , செப்-13

அதிமுக அலுவலகத்தின் சாவியை எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து ஓபிஎஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கடந்த ஜூலை 11-ம் தேதி கலவரம் நடந்ததை அடுத்து, அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டது. உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் சீல் அகற்றப்பட்டு, பழனிசாமி வசம் அலுவலக சாவி ஒப்படைக்கப்பட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் ஓ.பன்னீர்செல்வம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில், இபிஎஸ் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஓபிஎஸ் தரப்பில், உயர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்யக் கோரி வாதங்கள் முன்வைக்கப்பட்டன. அப்போது நீதிபதிகள், " மனுதாரரான ஓபிஎஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், அலுவலகத்தின் சாவியை தன்னிடம் ஒப்படைக்கும்படி அவர் எப்படி உரிமை கோர முடியும்? மனுதாரர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதன்மூலம் சட்ட நிவாரணம் பெறலாமே?" என்று கேள்வி எழுப்பினர்.

அப்போது ஓபிஎஸ் தரப்பில், "இன்னும் நான்தான் அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில்தான் உரிமை கோருகிறேன்" என்று வாதிடப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், அதிமுக அலுவலகத்தின் சாவியை எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# இன்று

# 13-9-22



சங்கட ஹர சதுர்த்தி

வெந்தய கீரை சமைத்து சாப்பிட்டால் இருமல் குறையும்
சக வருடம் 1944 பாத்ரபதம் 22

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுபகிருது ஆவணி 28 | SEP - TUE செவ்வாய் | | ஸ‌ஃபர் 16 | தேய்பிறை 256 / 109 | இராசிபலன் |

தேய். திரிதியை 19.03 (மா. 01.40) ரேவதி 10.13 (கா. 10.08) அகஸ் 30.18 தியாஜ் 00.00 சித்த. சங்கடஹர சதுர்த்தி. கரிநாள். திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி பெருமான் கோவிலில் ஸ்ரீஆண்டாள் மூலவருக்கு திருமஞ்சன சேவை. குரங்கனி முத்துமாலையம்மன் பவனி. சிறிய நகசு.

| | நல்லநேரம் | கௌ.நு.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; சிம்ம லக்கணம் இருப்பு நா. 9 வி. 49; சந்திராஷ்டமம் உத்திரம்; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.03

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

இராசிபலன்: மேஷம் - நலம்; ரிஷபம் - நன்மை; மிதுனம் - மேன்மை; கடகம் - ஆர்வம்; சிம்மம் - களிப்பு; கன்னி - சிக்கல்; துலாம் - தடை; விருச்சி - எதிர்ப்பு; தனுசு - சிந்தனை; மகரம் - மேன்மை; கும்பம் - பாராட்டு; மீனம் - நட்பு

இன்று 256 www.mahacalendar.com இன்னும் 109

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | பரிசுப்பொருட்கள்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,745 | Rs.5,147 |


# இனி நான் மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் செல்வேன் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி சிறுமி டான்யா



சென்னை, செப்-13

அரியவகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ள சிறுமி டான்யா, நான் இனிமேல் பள்ளிக்குச் செல்வேன் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

ஆவடி வீராபுரம் பகுதியை சேர்ந்த ஸ்ரீபன்ராஜ், சௌபாக்கியம் தம்பதியின் 9 வயது சிறுமி டான்யா, அரியவகை முகச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டார். தமக்கு உதவிக்கரம் நீட்டுமாறு அரசுக்கு அச்சிறுமி கோரிக்கை விடுத்திருந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த சிறுமிக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில் சவிதா மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தானாக முன்வந்து இலவசமாக சிறுமிக்கு சிகிச்சை அளிப்பதாக தெரிவித்தது.

இதனை தொடர்ந்து பல்வேறுகட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 23ம் தேதி சிறுமி டான்யாவுக்கு அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. 10 பேர் கொண்ட மருத்துவர்கள் குழு 8 மணி நேர தொடர் அளித்து சிறுமியின் முகத்தை சீரமைத்தது. நாட்டிலேயே முதல்முறையாக 9 வயது சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட முக சீரமைப்பு அறுவை சிகிச்சையாகவும் இது அமைந்தது.

இதனையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனைக்கு நேரில் சென்று சிறுமியிடம் நலம் விசாரித்ததுடன் நம்பிக்கை அளித்தார். சிறுமி டான்யா குணமடைந்ததை அடுத்து, அவர் மருத்துவமனையில் இருந்துவீடுதிரும்பியிருக்கிறார். இந்நிலையில் செய்தியாளர்களை சந்தித்த சிறுமி டான்யா, தனது கன்னம் சரியானது மகிழ்ச்சி அளிப்பதாகவும், தற்போது மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு செல்ல இருப்பதாகவும் கூறினார். தனக்கு உதவி செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



புதுக்கோட்டை செப்-13

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல், போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 280மனுக்களை பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர், இம்மனுக்களின் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

மேலும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில், 10 பயனாளிகளுக்கு தலா ரூ.4,871 மதிப்பீட்டில் விலையில்லா சலவைப் பெட்டிகளை மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) (பொ) கணேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் (பொ) எம்.மாரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் மது விற்பனைக்கு தடை விதிக்க நேரிடும்

## உயர் நீதிமன்ற கிளை எச்சரிக்கை



மதுரை செப்-13

பள்ளி மாணவர்கள் மது அருந்தும் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இல்லையெனில் மது விற்பனைக்கு தடைவிதிக்க நேரிடும் என உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தெரிவித்துள்ளது.

டாஸ்மாக் விற்பனை நேரத்தை மாற்றியமைக்க கோரிய வழக்கு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதனை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்துள்ள உத்தரவு, சீருடையுடன் பள்ளி மாணவர்கள் மது அருந்தும் புகை ப்படம் அதிர்ச்சியை தருகிறது.

பள்ளி மாணவர்கள் மது அருந்தும் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இல்லையெனில் மது விற்பனைக்கு தடைவிதிக்க நேரிடும். இவ்வாறு உயர்நீதிமன்ற மதுரைக்கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் டாஸ்மாக் விற்பனை நேரத்தை மதியம் 2 மணி முதல் இரவு 8 மணி வரை மாற்றியமைக்க கோரிய வழக்கை 2 வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

# புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா ஆய்வுக்கூட்டம்



புதுக்கோட்டை செப்-13

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (ஊரகம்) வீடு கட்டும் பணிகளை விரைவுப்படுத்த வெளி ஒப்பந்த அடிப்படை முறையில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் புதுக்கோட்டை மாவட்ட

செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி ஜோஸ்பின் நிர்மலா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்உதவிதிட்ட அலுவலர் வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் கிருஷ்ணமூர்த்தி, புதுக்கோட்டை உபகோட்டம் உதவி செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி கலைவாணி ஆகியோர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், வட்டார வளர்ச்சி அலுவலர் வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் ரமேஷ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன் மற்றும் அனைத்து ஊராட்சி ஒன்றிய தொழில்நுட்ப உதவியாளர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வேலைகளை விரைவாக முடிக்கவும், துவங்கப்படாத நிலையில் உள்ள பணிகளை துவங்கி முடிப்பதற்கான அறிவுரைகளும் வழங்கப்பட்டது.

# பாண்டிச்சேரியில் இருந்து விற்பனைக்கு கொண்டு வந்த 20 டன் நெல் பறிமுதல்



புதுக்கோட்டை, செப்.13-

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பாண்டிச்சேரியில் இருந்து கொண்டுவரப்பட்ட 20 டன் நெல்களை பறிமுதல் செய்த போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தற்போது குருவை சாகுபடி செய்யப்பட்டு அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன அறுவடை செய்த நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்காக நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடம் இருந்து மட்டுமே நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் வெளி மாவட்டங்களில் இருந்து நெல் மூட்டுகளை வியாபாரிகள்கொண்டுவந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதை தடுக்கவும் குடிமைப்பொருள்வழங்கள் குற்றப் புலனாய்வுத்துறை காவல்துறை இயக்குனர் உத்தரவுபடியும், திருச்சி மண்டல காவல் கண்காணிப்பாளர் சுஜாதா மற்றும் தஞ்சாவூர் சரககாவல்துறைதுணைக் கண்காணிப்பாளர் சரவணன், உத்தரவு படியும், புதுக்கோட்டை குடிமைப்பொருள் வழங்கள் குற்றப் புலனாய்வுத்துறை காவல் உதவி ஆய்வாளர் வேம்பு மற்றும் காவலர்கள் தேவதயவு ஆகியோர் இரவு வாகன தணிக்கை செய்தபோது விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த குமாரசாமி அழகு என்பவரின் மகன் ராஜீவ் காந்தி என்பவர். TN31 H 1711 லாரியில் சுமார் 20 டன் நெல்லை உரிய ஆவணம் இன்றி பாண்டிச்சேரியில் இருந்து கொண்டு வந்தவரை பிடித்து எஸ் ஆர்எம்க்கு தகவல் தெரிவித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அழியா நிலை கிடங்கில் ஒப்படைத்தனர்.

## ஆவுடையார்கோயில் அருகே

# தென்னமாரி ஸ்ரீ கற்பகவிநாயகர் சுவாமி திருக்கோயில் மஹாகும்பாபிஷேகம்



ஆவுடையார்கோயில், செப்.13-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் அருகே தென்னமாரிஸ்ரீகற்பகவிநாயகர் சுவாமி திருக்கோயில் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது, ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

ஆவுடையார்கோயில் தாலுகா தென்னமாரி கிராமத்தில் அமைந்து அருள்பாளித்துவரும் ஸ்ரீ கற்பகவிநாயகர், ஸ்ரீசமயபுரத்து மாரியம்மன்

ஆலயத்தில் திருப்பணிகள் நிறைவு பெற்று அப்பகுதி கிராமத்தார்களால் கும்பாபிஷேகம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 11ம் தேதி ஞாயிற்றுகிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது, விழாவின் முக்கிய நாளான நேற்று இரண்டாம் கால யாகபூஜை நிறைவுபெற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டு பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.

கடம்புறப்பாடானது கோயிலை வலம் வந்து பின்பு கோபுர கலசத்தை அடைந்தது, அதனைத் தொடர்ந்து கணேசன், செல்வ குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கும்பாபிஷேகம் நடைபெற்றது, கும்பாபிஷேக நிகழ்ச்சியில் தென்னமாரி உள்ளிட்ட சுற்று வட்டார கிராம பொதுமக்கள் ஆன்மீக மெய்யன்பர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஸ்ரீ கற்பக விநாயகர் ஸ்ரீ சமயபுரத்துமாரியம்மன் அருள்பெற்றுச் சென்றனர் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்கத்தில் நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு கூட்டம் மற்றும் தொடர் மருத்துவ கருத்தரங்கு



புதுக்கோட்டை, செப்.13-

புதுக்கோட்டைஇந்திய மருத்துவ சங்கத்தில் செயற்குழு, குடும்பப் பாதுகாப்புத் திட்டம், தனியார் மருத்துவமனை கூட்டமைப்பு,பொதுக்குழு கூட்டம் மற்றும் தொடர் மருத்துவ கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது.

இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை மற்றும் ஸ்ரீ காமாட்சி மெடிக்கல் சென்டர் தஞ்சாவூர் இணைந்து நடத்திய தொடர் மருத்துவ கருத்தரங்கு புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்க கூட்டரங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை தலைவர் டாக்டர் சுவாமிநாதன் தலைமை வகித்து, ஸ்ரீ காமாட்சி மெடிக்கல் சென்டர் தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் ரமேஷ் பாபு முன்னிலை வகித்தார். அனைவரையும் கிளைச் செயலாளர் டாக்டர் முகமது சுல்தான் வரவேற்றார், தஞ்சாவூர் ஸ்ரீ காமாட்சி மெடிக்கல் சென்டரில் மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் மூத்த ஆலோசகர் டாக்டர் வசந்தகுமார் பேசியபோது, குறுகிய காலத்தில் பெரிய அளவில் நுரையீரலைத் தாக்கும் நோய்களை பற்றியும் அவற்றை கண்டறிந்து குணப்படுத்தவும் மற்றும் நோயின் தன்மை நுரையீரலை முற்றிலும் பாதிக்கும் பொழுது தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாச கருவி மூலம் குணப்படுத்தும் வழிமுறையையும் திரை மூலமும் விளக்கம் அளித்தார்.

அதைத்தொடர்ந்து குழந்தைகள் சிறப்பு பிரிவில் பணியாற்றும் ஆலோசகர்டாக்டர்பிரதீப் விளக்கம் அளித்ததாவது தொடர் இசுவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு மருந்து மாத்திரைகள் கிடைத்த போதிலும் இசுவு குணமாகாத சூழ்நிலையில் நோயின் தன்மையை புதிதாக நடப்பு காலத்தில் உள்ள கண்டறியும் விதம், பயன்படுத்தும் மருந்தின் அளவு, பற்றியும் தொடர் இசுவு நோய்நோயை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும் வழியினை திரை மூலம் விளக்கினார்.

பின்னர் காமாட்சி மெடிக்கல் சென்டர் தலைமை நிர்வாகி அலுவலர் டாக்டர் ரமேஷ்பாபு சிறப்புரை ஆற்றிய போது டெல்டா மாவட்டங்களில் முதல் முறையாக நூறு சிறப்பு மருத்துவர்கள், ஏழு தீவிர சிகிச்சை மருத்துவ பிரிவு மற்றும் 300 படுக்கை கொண்ட பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக அமையப்பெற்று நோயாளிகளுக்கு குறைந்த செலவில் சிறப்பாக மருத்துவசிகிச்சை மக்கள் மத்தியில் அளிக்கப்பட்டு வருகிறது எனறு கூறினார்.

முன்னதாக இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளையின் உறுப்பினர்களுக்கான செயற்குழு நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தலைவர் டாக்டர் சுவாமிநாதன் தலைமையிலும், குடும்ப பாதுகாப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ராஜா மற்றும் தனியார் மருத்துவமனை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சலீம், செயலாளர் டாக்டர் முகமது சுல்தான், நிதி செயலாளர் டாக்டர் கோபாலகிருஷ்ணன் மற்றும்மூத்தமருத்துவர்கள் கலந்து கொண்டனர். இதில் தற்சமயம் நிலவும் மழைக்காலங்களில் மிக அதி வேகமாக பரவக்கூடி நோய்கள் பற்றியும் அவற்றை அரசுடன் இணைந்து சிறப்பான சேவையை மக்களுக்கு வழங்க பல்வேறு முடிவுகளை மேற்கொண்டு கலந்து ஆலோசித்தனர்.

நிறைவாக இந்திய மருத்துவ சங்கம் புதுக்கோட்டை கிளை நிதி செயலாளர் டாக்டர் கோபாலகிருஷ்ணன் நன்றியுரை கூறினார். பல்வேறு மூத்த மருத்துவர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை தஞ்சாவூர் ஸ்ரீ காமாட்சி மெடிக்கல் சென்டர்மருத்துவர்கள் இந்திய மருத்துவ சங்க மருத்துவர்கள் சிறப்பாக செய்தனர்.

## திருமருகல் ஒன்றியத்தில்

# ஊராட்சி செயலாளர்கள் 3 நாட்கள் தொடர் விடுமுறை வேலைநிறுத்தம்

நாகப்பட்டினம், செப்.13-

ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிசெயலாளர்கள் வரி வசூல், மின்விளக்கு பராமரித்தல், 100 நாள் வேலைத்திட்டம், முழு சுகாதாரம் உள்பட 20-க்கும் மேற்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் ஊராட்சி செயலாளர்களுக்கு கூடுதல் பணி சுமை ஏற்படுவதாகவும், அதிக மன உளைச்சல் ஏற்படுவதாகவும், பல ஊராட்சி தலைவர்கள் ஊதியம் அனுமதிப்பதில் பாரபட்சம் காட்டுவதாகவும், ஊராட்சி செயலாளர்களுக்கு கருவூலம் மூலம் மாத ஊதியம்பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஓய்வூதியத்தை உயர்த்திவழங்கவேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 12-ந்தேதி முதல் 14-ந்தேதி வரை 3 நாட்கள் தொடர் விடுமுறை வேலைநிறுத்தம் என ஊராட்சிசெயலாளர்கள் சங்க மாநில தலைவர் ஜான் போஸ்கோ பிரகாஷ் அறிவுறுத்தலின்படி திருமருகல் ஒன்றியத்துக்கு உட்பட்ட 39ஊராட்சிகளில் 34ஊராட்சிசெயலாளர்கள் நாட்கள்தொடர்விடுமுறை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.



▶ மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை வாயிலாக மாவட்ட கலெக்டர் லலிதா தலைமையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் முருகதாஸ், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்ராஜ் இணை இயக்குநர் முருகண்ணன் இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) சேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) ஜெயபாலஜி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயபாலன் மற்றும் பலர் உள்ளனர்.

# பெரியபாளையத்தில் உலக தற்கொலை தடுப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு





ஊத்துக்கோட்டை, செப்13–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,குமரப்பேட்டை ஊராட்சியை சேர்ந்த ராள்ளபாடி கிராமத்தில் ஆதரவு இல்லம் மற்றும் மனநல மையம் ஒன்று இயங்கி வருகிறது. இந்நிலையில் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 10-ந் தேதி உலக தற்கொலை தடுப்பு தினமாக உலக அளவில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஆதரவு இல்லம் மற்றும் மனநல மையத்தின் சார்பில் பெரியபாளையம் பஸ் நிலையத்திற்கு வருகின்ற பயணிகளுக்கு தற்கொலை தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும்,துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சியும்நேற்று மாலை நடைபெற்றது.

குமரப்பேட்டையில் உள்ள பள்ளி மாணவர்களுக்கும் விழிப்புணர்வுஏற்படுத்தும் நிகழ்ச்சியும்,சூலைமேனி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கும் இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்பொழுது தற்கொலை செய்து கொள்வதற்கான காரணங்களாக மன அழுத்தம்,குடும்ப உறவுகளில் பிரச்சனைகள், காதல் தோல்வி, வன்கொடுமைகள், போதை பழக்க வழக்கங்கள், பொருளாதார நெருக்கடி உள்ளிட்டவைகள் என்றும் இவற்றை போக்க என்னென்ன? வழிமுறைகள் என்பதையும் எடுத்துக் கூறினர்.

இந்நிகழ்ச்சிக்கு, ஆதரவு இல்லம் மற்றும் மனநல மையத்தின் நிறுவனத் தலைவர் கோடீஸ்வர ராவ் தலைமை தாங்கினார். ஊழியர்கள் ஜீவா,தினேஷ்,ஜனனி, ஸ்வேதா,சரண்ராவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சனோ கொரியன் மேச்யூஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்ச்சிகளில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயந்தி,ஊராட்சி மன்ற தலைவர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ்
A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில், சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் மனநல நல்லாதரவு மன்றத்தின் 'மனம்'தூதுவர் திட்டத்தை தொடங்கி வைத்தார். அருகில் துறையின் முதன்மை செயலாளர் செந்தில்குமார், தேசிய நல வாழ்வு குழும இயக்குனர் ஷில்பா பிரபாகர் சதீஷ், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



▶ சென்னை தண்டையார்பேட்டையில் தேசிய ஊட்டச்சத்து மாதத்தினை முன்னிட்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் காசிமேடு திட்டம் எண் 1..38. வது வட்ட பொறுப்பாளர்.. 4வது மண்டல குழு தலைவர் நேதாஜியு.கணேசன்.மற்றும் ஆர்.கே.நகர் அரசு மற்றும் கலை கல்லூரி முதல்வர் சுடர்கொடி தலைமையில்,40 வார்டு மாமன்ற உறுப்பினர் குமாரி நாகராஜ் ,வட்ட பொறுப்பாளர்கள் மணிகண்டன், நாகராஜ் எஸ். கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அமுதா ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.இந்த பேரணியானது ஆர் கே நகர் அரசு மற்றும் கலைக்கல்லூரி துவங்கி புது வண்ணாரப்பேட்டை வ.உ.சி.நகர் சுனாமி குடியிருப்பு ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. பேரணியில் அங்கவன்வாடி பணியாளர்கள் கல்லூரி மாணவ மாணவியர்கள் பேண்ட் வாத்தியங்கள் முழங்க ஊட்டச்சத்துக் குறித்து பதாகைகள் ஏந்தி கோஷங்களை எழுப்பி சென்றனர்.

# சிறுவாபுரி சிவன் கோயிலில் உழவாரப்பணி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, செப்13–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,பெரிய பாளையம் அருகே உள்ள சிறுவாபுரி கிராமத்தில் இந்துசமய அறநிலையத்துறைக்கு சொந்தமான மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஆனந்தவல்லி சமேத அகத்தீஸ்வரர் திருக்கோயில் ஒன்று உள்ளது. புராண காலத்தில் அகத்தியர் இக்கோவிலுக்குவந்துவந்து வணங்கியதால்இங்குள்ள மூலவர் அகத்தீஸ்வரர் எனும் திருப்பெயரால் அழைக்கப்படுகின்றார்.

முற்காலத்தில் பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை சிவபெருமான் அருந்தியதால் ஏற்பட்ட களைப்பினைஇத்தலத்தில் பார்வதிதேவி போக்கி ஆனந்தமயமாய் அருள்பாலிப்பதால் இங்குள்ள அம்பிகை ஆனந்தவல்லி எனும் திருப்பெயருடன் விளங்குகின்றார்.

இவ்வாறு சிறப்பு வாய்ந்த இந்த தலத்திற்கு 6 வாரங்கள் வந்து வணங்கினால் வாழ்வில் வேற்றுமை நீங்கி ஆனந்தம் பெருகும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இவ்வாறு பழமைவாய்ந்த இந்த திருக்கோயிலுக்கு 2012-ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது. எனவே, இக்கோவிலுக்கு விரைவில் திருப்பணிகள் தொடங்க உள்ளது. இந்த திருக்கோயில் பிராகாரத்தில் செடி,கொடிகள் முளைத்துள்ளதைச் சுத்தம் செய்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை வைத்தனர்.

இதனை முன்னிட்டு திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் நேற்று சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது. திருக்கோயில் நிர்வாகம் மற்றும் சென்னை இந்து ஆலயங்கள் சுத்தம் செய்யும்இறைபணி சங்கம் ஆகியவை இணைந்து சுமார் 50-க்கும் மேற்பட்ட நபர்கள் இக்கோயில் பிராகாரத்தில் இருந்த செடி,கொடிகளை அகற்றி உழவாரப்பணியை செய்தனர்.இதில்,கோயில் நிர்வாக அதிகாரி சோ.செந்தில்குமார், சின்னம்பேடு ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சேகர், வடக்குநல்லூர் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் அரிதாஸ்,பி. சந்தானம் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவர்கள் மது அருந்தும் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அறிவுறுத்தல்

மதுரை , செப்13–

டாஸ்மாக் விற்பனை நேரத்தை மதியம் 2 மணி முதல் இரவு 8 மணி வரை மாற்றியமைக்க கோரி ராம்குமார் ஆதித்தன் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவை நேற்று விசாரித்த நீதிமன்றம் சீருடையுடன் பள்ளி மாணவர்கள் மது அருந்தும் புகைப்படம் அதிர்ச்சியை தருகிறது. பள்ளி மாணவர்கள் மது அருந்தும் பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இல்லையெனில் மதுவிற்பனைக்கு தடை விதிக்க நேரிடும். நாடு எங்கு சென்று கொண்டிருக்கிறது என தெரியவில்லை என்று தெரிவித்துள்ளது.

இதையடுத்து வழக்கின் அடுத்த விசாரணையை மேலும் 2 வாரத்துக்கு ஒத்திவைத்து உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

# ஏனங்குடியில் மக்கள் நேர்காணல் முகாம்



நாகப்பட்டினம், செப்.13–

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் ஏனங்குடி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஏனங்குடி, கயத்தூர், புத்தகரம், ஆதலையூர், மாதிரிமங்கலம், திருப்புகலூர் உள்ளிட்ட 6-கிராமங்களுக்கான மக்கள் நேர்காணல் முகாம் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு நாகை மண்டல துணை வட்டாச்சியர் கவிதாஸ் தலைமை தாங்கினார். வருவாய் ஆய்வாளர் ஜெயந்தி,ஏனங்குடி ஊராட்சி மன்ற தலைவர் ஹாஜா நிஜாமுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் பெரும்பாலான மனுக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, மயான வசதி, சமுதாய கூடம், ஆற்றின் கரையோரங்களில் தடுப்பு சுவர் அமைத்து தரக்கோரி 250-க்கும் மேற்பட்ட மனுக்களை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர்கள் வெங்கட்ராமன்,மாரியப்பன்,உமா,சுந்தர பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



▶ சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் நேற்று, நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் குடிநீர் வளங்கள் மற்றும் கழிவு நீரகற்றல் மேலாண்மை தொடர்பான தேசிய அளவிலான கருத்தரங்கை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, டுபிகோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர், கூடுதல் தலைமைச் செயலாளர் சாய் குமார், ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்ட அமைச்சகம் கூடுதல் செயலாளர் மற்றும் திட்ட இயக்குனர் (அம்ருதி) தாரா, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குனர் கிரிலோஷ் குமார், பேரூராட்சிகளில் ஆணையாளர் செல்வராஜ், தமிழ்நாடு மேலாண்மை குடிநீர் வளங்கள் வாரியம் மேலாண்மை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குனர் பொன்னையா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள்கள் துணை சபாநாயகர் வழங்கினார்



தி.மலை , செப்13–

திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவலம் அரசு ஆண்கள்,பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ராஜந்தாங்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இலவசசைக்கிள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர்கள் வெங்கடாசலம், அனுராதா,பாரதி ஆகியோர் தலைமை தாங்கினார்.வேட்டவலம் பேரூராட்சி மன்ற தலைவர் கௌரி,மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஆரஞ்சு ஆறுமுகம், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேந்திரன், ராஜந்தாங்கள் ஊராட்சி மன்ற தலைவர் மலர் ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உதவி தலைமை ஆசிரியர் ரமேஷ் வரவேற்றார்.

சிறப்பு விருதுநராக தமிழகசட்டமன்றதுணை சபாநாயகர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு 592 மாணவ,மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களை வழங்கினார். பின்னர் வட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வேட்டவலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 28 பேருக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். முடிவில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி உதவி தலைமை ஆசிரியர் செந்தில் நன்றி கூறினார்.

## மயிலாடுதுறை அருகே மாப்படுகை அரசு உயர்நிலைப்பள்ளி

# மாற்றுத்திறனாளியான தலைமையாசிரியருக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது.பள்ளியின் சார்பில் பாராட்டு விழா



மயிலாடுதுறை, செப்.13:–

மயிலாடுதுறை மாவட்டம்,மாப்படுகை அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருபவர் தாமரைச்செல்வி.இவர் கடந்த 25–ஆண்டுகளாக ஆசிரியையாக சேவையாற்றி வருகிறார். இவர் கடந்த 21-ஆண்டுகளாக மயிலாடுதுறை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி அதனை தொடர்ந்து தாளஞ்சேரி மற்றும் கொற்கை பள்ளிகளிலும் பணியாற்றி இப்போது மாப்படுகை அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

மாற்றுத்திறனாளியான இவர் மாணவ மாணவிகளின் ஒழுக்கத்திற்கும், தேர்ச்சி விகிதத்திற்கும் தம் வேலை செய்த அனைத்து பள்ளிகளிலும் அரும்பாடுபட்டவர் ஆவார். அவருக்கு செப்டம்பர் 5 ஆசிரியர் தின விழாவில் தமிழக பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் மிக உயரிய விருதான நல்லாசிரியருக்கான டாக்டர்ராதாகிருஷ்ணன் விருதுக்கான சான்றிதழ், பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசினை தமிழக அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு மற்றும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நல்லாசிரியை தாமரைச்செல்விக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நல்லாசிரியை மாற்றுத்திறனாளியான தலைமையாசிரியர் தாமரைச்செல்விக்கு பள்ளியின் சார்பில் பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாலு தலைமையேற்று நடத்தினார். பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் தெட்சிணாமூர்த்தி வரவேற்றார்.

நிகழ்ச்சியில் வழக்கறிஞர் ராம. முத்துக்குமார்,ஒன்றிய குழு உறுப்பினர் சிவக்குமார்,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கருப்பையா,டி.எல். ஆர்.ராஜேஸ்வரன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் இளஞ்செழியன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் சுகந்திசெந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இயற்கை விவசாயி ராமலிங்கம், விவசாய சங்க ஒன்றிய செயலாளர் மேகநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

அப்போது மயிலாடுதுறை, தேரழுந்தூர், சித்தமல்லி, திருமணஞ்சேரி, மூவலூர் ஆகிய பள்ளிகள் இருந்து வருகை தந்த 30-க்கும் மேற்பட்ட ஆசிரிய,ஆசிரியைகளும் தலைமையாசிரியர் தாமரைச்செல்விக்கு சால்வை அணிவித்தும், புத்தகங்களை வழங்கியும், பூங்கொத்து கொடுத்தும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளியின் ஆசிரியை,ஆசிரியர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியில் உடற்கல்வி ஆசிரியர் ஆறுமுகம் நன்றி தெரிவித்தார்.

தலைமையாசிரியர் தாமரைச்செல்வி பேசிய போது, எனது பள்ளியின் மாணவ மாணவிகளின் 100 சதவீத தேர்ச்சிக்கு நான் பாடுபடுவேன் என்றும் அவர்களுக்கு காலை 8 மணி முதல் சிறப்பு வகுப்புகள் நடத்தியும் அவர்களுக்கு காலை உணவுகளையும் வழங்குவேன் என்றும் தெரிவித்தார். மாற்றுத்திறனாளி தலைமையாசிரியர் தாமரைச்செல்விக்கு அப்பகுதி பொதுமக்களும், பெற்றோர்களும் பாராட்டி வருகின்றனர்.

# தஞ்சாவூரில் நாட்டு மீன்கள் உற்பத்தியை அதிகரிக்க ஆட்சியர் நடவடிக்கை

தஞ்சாவூர் , செப்13–

தஞ்சாவூரில் அமைக்கப்பட்டுள்ள நீர்வாழ் உயிரின ஆய்வு கூடத்தில்,8கோடி மீன்கள் என்ற உற்பத்தி இலக்கை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் கரந்தையில் உள்ள நீர்வாழ் உயிரின ஆய்வுக் கூடத்தில் ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆய்வு செய்தார். அதன் பிறகு அவர் கூறியதாவது, 'உள்நாட்டுமீன்வளர்ப்பில் மாநிலத்திலேயே முதன்மையான மாவட்டமாக தஞ்சாவூர் மாவட்டம் திகழ்கிறது.

உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், மீன் வளர்ப்போருக்குக் குறைந்த விலையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் மீன் குஞ்சுகள் விநியோகம் செய்வதற்காகவும் கரந்தை, நெய்தலூர்,

அகரப்பேட்டை, திருமங்கலக்கோட்டை ஆகிய 4 இடங்களில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், கரந்தையில் அரசு நுண் மீன் குஞ்சு பொரிப்பகம் இயங்கி வருகிறது. குறைந்து வரும் நாட்டு இன மீன் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக தமிழக அரசால் கல்பாசு (கருஞ்சேல் கெண்டை) 2.50 லட்சமும், இந்திய பெருங்கெண்டை 2.50 லட்சமும் என மொத்தம் 5லட்சம் உற்பத்தி செய்து, இம்மாவட்டத்திலுள்ள ஆறுகளில் இருப்பு செய்வதற்கான பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

கரந்தைஅரசுநுண்மீன் குஞ்சு பொரிப்பகத்துக்கு உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 8 கோடி நுண்மீன் குஞ்சுகளில், இதுவரை 6.60 கோடி இலக்கு எட்டப்பட்டுள்ளது. இலக்கை முழுமையாக நிறைவு செய்வதற்கு மீன்வளத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மீன்வள உதவி இயக்குநா சிவக்குமார், மீன்வள ஆய்வாளர் ஆனந்தன், கண்காணிப்பாளர் மாதவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்ட நான் முதல்வன் திட்டத்தை தொடர்ந்து நேற்று சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தர் அரங்கில், உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சிவி கணேசன் ஆகியோர் தலைமையில், நான் முதல்வன் திட்டத்தின் மண்டல மாநாடு நடைபெற்றது. உடன் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை முதன்மை செயலாளர் உதயசந்திரன், உயர்கல்வித்துறை முதன்மை செயலாளர் கார்த்திகேயன், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் லட்சுமி பிரியா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குனர் இன்னசென்ட் திவ்யா, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் வேல்ராஜ் ஆகியோர் உள்ளனர்.






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாட்டின் பாரத சாரணர், சாரணியர் இயக்கத்தின் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் ஒன்றியத்துக்கு உட்பட்ட வேள்வரை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீஐந்து வேம்பு காளியம்மன் மற்றும் பரிவார தேவதைகளுக்கு கடந்த இரண்டு நாட்களாக யாகசாலையில் புனித நீரை வைத்து யாகம் வளர்க்கப்பட்டு பின்னர் சிவாச்சாரியார்கள் புனித நீரை தலையில் சுமந்து கோவிலை சுற்றி வலம் வந்து கோபுர கலசத்தில் புனிதநீரை ஊற்றி தீபாராதனை காட்டப்பட்டது, பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது, 12 வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபிஷேக விழா நடத்தினால் விவசாயம் செழிக்கும் பொதுமக்கள் நோய் நொடி இல்லாமல் வாழ்வார்கள் என்ற ஐதீகத்தின்படி கும்பாபிஷேக விழா நடைபெற்றது, நிகழ்ச்சி ஏற்பாடுகளை வேள்வரை கிராமத்தினர் செய்திருந்தனர்.

# கடையநல்லூர் நகராட்சி குமந்தபுரத்தில் சுதந்திர போராட்ட தியாகி இமானுவேல் சேகரன் 65– ஆவது குருபூஜை



தென்காசி,செப்.13-

தென்காசிமாவட்டம் கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட 1-வது வார்டு குமந்தபுரத்தில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய நல அமைப்பின் சார்பாக இந்திய சுதந்திர போராட்ட தியாகி இமானுவேல் சேகரன் 65- ஆவது குருபூஜை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு எல். கோவிந்தராஜன் தலைவர், பொருளாளர் எ. பூ ராஜா, கௌரவ ஆலோசகர்கள் வி. கணேசன், துணைத் தலைவர் ஆர். கருப்பசாமி, முன்னாள் தலைவர் எஸ். முருகானந்தம், செய்தி தொடர்பாளர் எ. ராஜேஷ், நிதிச் செயலாளர் பிரிவு. சங்கர்,எம். முத்துச்சாமி, சி. குருசாமி, நாராயணன், எம். முத்துசாமி, 4-வது வார்டு அமைப்பு உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு மக்கள் நல அமைப்பினர் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் மா.செல்லத்துரை, கடையநல்லூர் நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், நகரத்துணைத் தலைவர் காசி, 1 வது வார்டு செயலாளர் காளிமுத்து, கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் ரேவதி பாலீஸ்வரன், முன்னிலையில் மற்றும் பொதுமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அன்னதானமும் சிறப்பாக வழங்கப்பட்டது, மேலும் வெளிநாடு வாழ் தேவேந்திர குல வேளாளர், சமுதாய நல அமைப்பு, எல். மணிகண்டன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# கள்ளக்குறிச்சியில் ஊட்டச்சத்து கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா



கள்ளக்குறிச்சி, செப்,13_

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்துறையின் சார்பில், தேசிய ஊட்டச்சத்து மாதவிழாவை முன்னிட்டு, ஊட்டச்சத்து கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார் நேற்று திறந்து வைத்து, கண்காட்சியினை பார்வையிட்டார்.

அப்பொழுது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பாக, ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தில் ஊட்டச்சத்து கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உணவுத் திருவிழா மற்றும் ஊட்டச்சத்து கண்காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் மாதிரி அங்கன்வாடி மையம், சமச்சீரான உணவு, நுண் ஊட்டச்சத்து உணவுகள், மூலிகை தாவரங்கள், காய்கறிகள், பழத்தோட்டங்கள், குழந்தையின் முதல் 1,000 நாட்களின் முக்கியத்துவம், குழந்தையின் வளர்ச்சி நிலைகள், குழந்தை மையங்களில் நடைபெறும் முன்பருவ கல்வி, சமுதாய நிகழ்வுகள், சிறுதானியம் மற்றும் இணை உணவினால் செய்யப்பட்ட உணவு வகைகள் ஆகியவை பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியின் முக்கிய நோக்கமே, தாய் சேய் இறப்புகளை குறைத்தல், அனைவருக்கும் ஊட்டச்சத்து கிடைத்திட உறுதி செய்தல், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனை மேம்படுத்துதல் ஆகும். மேலும், பொதுமக்கள், நம்முடைய பாரம்பரிய உணவு வகைகளை உண்டு, ஆரோக்கியமாக வாழ்ந்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார், இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ், மாவட்ட

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் செல்வி, உதவி ஆணையர் (கலால்) ராஜவேல், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம்–கடையநல்லூரில் பிரைமரி ரஹ்மானியாபுரத்தில் நிர்வாகிகள் தேர்வு



தென்காசி, செப்.13-

தென்காசிமாவட்டம்-கடையநல்லூர் முஸ்லிம் லீக்மேற்கு பகுதி 8-வார்டு பிரைமரி ரஹ்மானியாபுரத்தில்அமைக்கப்பட்டுள்ளது, 8-தெருவில்20, 19, 18, 13, 12, 11, 6, 5-ஆகிய வார்டு பிரைமரி நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தென்காசி மாவட்டத் தலைவர் சையது சுலைமான் முன்னிலையில் பேட்டை ஜமாத் முன்னாள் செயலாளர் என்.ஒ.சாகுல் அமீது தலைமையில், எஸ்.டி.யு. மாவட்ட அமைப்பு செயலாளர் ஜபருல்லா வரவேற்புரை ஆற்றினார், கிராத் மௌலாவி சேக் முகமது மைதீன், மக்கா நகர் தலைமை இமாம் விளக்க உரையாற்றினார்.

முன்னாள் திருநெல்வேலி மாவட்ட செயலாளர் இக்பால், முஸ்லிம் மாணவர் பேரவை தேசிய துணைத் தலைவர் புளியங்குடி அல் அமீன் புதிய நிர்வாகிகளை பாராட்டிப் பேசினார், 5-வது வார்டு முஸ்லிம் லீக் நிர்வாகிகள் தலைவர் அப்துல் மஜீத், செயலாளர் காதர் மீரான், பொருளாளர் கோதரிஷா, ஆறாவது வார்டு தலைவர் திவான் மசூது, செயலாளர் முகமது மைதீன், பொருளாளர் ஆசாத் அலி, 11வது வார்டு தலைவர் உமர் கத்தாப், செயலாளர் மீரா மைதீன், பொருளாளர் சாகுல் ஹமீது, 12 வது வார்டு தலைவர் திவான் மஸ்தான், செயலாளர் கலந்தர் மஸ்தான் பொருளாளர் சேகனா, 13-வது தலைவர் முகமது ஹனிபா, செயலாளர் சுலைமான், பொருளாளர் யாசின், 18 வது வார்டு தலைவர் முகமது அஸ்மல், செயலாளர் வைகை பாதுஷா, பொருளாளர் முஹ்ஸின்காபில்,19-வது வார்டு தலைவர் ஜபருல்லா, செயலாளர் சேகுதுமான், முஹ்ஸின்காபில், 19 ஆவது வார்டு தலைவர் ஜடசலீம் பொருளாளர், உதுமான், 20-வது வார்டு தலைவர் கோதரிஷா, செயலாளர் பட்டாணி, மைதீன், மௌலாவி, ஷேக் முகமது மற்றும் திவான்மசூது நன்றி கூறி நிறைவு செய்தார்.

# அரியலூர் பகுதி கோவில்களில் கும்பாபிஷேக விழா கோலாகலம்



அரியலூர், செப்.13-

அரியலூர் பகுதியில் கோவில்களில், கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது.

அரியலூர் அருகே, ஓ. கூத்தூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் வீரனார், கருப்பண்ணசாமி, பச்சையம்மன், பூங்காயி அம்மன் ஆகிய ஆலயங்களுக்கு, மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

ஓட்டக் கோவில் டி .ஆர். ஆர். டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் டி. ராஜேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் ஆர். செங்கமலை மற்றும் கிராம பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவை, சிவாச்சாரியார்கள் கலையரசு, சரவணன், சாமிநாதன் உள்ளிட்டோர் நடத்தி வைத்தனர்.

ஓ.கூத்தூர் மெயின் ரோட்டில், தொழிலதிபர் முருகேசன் மற்றும் அவர் சார்ந்த, பக்த பிரமுகர்களுக்கு பாத்திய பட்ட, பாப்பாத்தி அம்மன் ஆலயத்தில் உள்ள, விநாயகர், தையல்நாயகி, பாப்பாத்தி அம்மன், நல்லப்பர், வீர முத்தையா, கருப்புசாமி, மருதையன், வெள்ள முத்து ஆகிய ஆலய பரிவார தெய்வங்களுக்கு, ஜீர்னோத்தாரண, அஷ்டபந்தன, மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

குன்னம் ஸ்ரீனிவாச பட்டாச்சாரியார் தலைமையிலான வேத விற்பன்னர்கள், கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி, கும்பாபிஷேக விழாவை நடத்தினர், விழாவில் கிராம பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர், கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

பொய்யாத நல்லூர் கிராமத்தில் உள்ள, ஸ்ரீ பொன்னியம்மன், ஸ்ரீ பெரியநாயகி அம்மன் திருக்கோயில்களுக்கான கும்பாபிஷேக விழா, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கு. தங்கவேலு உடையார் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது, கோயிலின் அறங்காவலர் ஆ. பழனிவேல் பூசாரி மற்றும் கிராம பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கும்பாபிஷேக விழாவில் பங்கேற்றனர்.

அரியலூர் அருகே உள்ள, அம்மாகுளம் கிராமத்தில் எழுந்தருளும் விநாயகர், காளியம்மன், கருப்பண்ண சுவாமி, கன்னிமார் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது. திருப்பூர் மாவட்டம், சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலை சேர்ந்த, சிவராஜ் சிவாச்சாரியார், சங்கர் சிவாச்சாரியார் உள்ளிட்ட சிவாச்சாரியார்கள், கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி, கும்பாபிஷேக விழாவை நிறைவு செய்தனர், கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, வாணவேடிக்கை நிகழ்ச்சியுடன், சுவாமி திருவீதி உலா மற்றும் இசைக்கச்சேரி நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

பக்தி சிரத்தையுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், அம்மாகுளம் கிராமத்தை சேர்ந்த கோயில் தர்மகர்த்தாக்கள் ரவி, ராமலிங்கம், சிவக்கொழுந்து, பொன் ராமகிருஷ்ணன் மற்றும் ஏராளமான கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் அதிமுக பிரமுகர் சசிகலாவுக்கு உற்சாக வரவேற்பு

அரியலூர்,செப்.13-

சேலம் மாவட்டத்திற்கு செல்லும் வழியில், அதிமுக பிரமுகர் சசிகலாவுக்கு அரியலூரில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இது பற்றி அரியலூர் மாவட்ட தியாகத் தலைவி சின்னம்மா பேரவை செயலாளர் ஏ.ஆர். வி அருவி தமிழரசன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியதாவது, சேலம் மாவட்டம், தலைவாசல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, தஞ்சாவூரில் இருந்து புறப்பட்டு, அரியலூர், பெரம்பலூர் வழியாக செல்லும், அதிமுக பொதுச் செயலாளர் சசிகலாவுக்கு, அரியலூர் புறவழிச்சாலையில்,பூரண கும்ப மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு கொடுத்து, வழியனுப்பி வைக்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட தியாகத் தலைவி சின்னம்மா பேரவை செயலாளர் ஏ .ஆர். வி. அருவி தமிழரசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தஞ்சை பொன் த.மனோகரன், அமைப்பு நிர்வாகிகள் இலைகடை சேகர், 12-வது வார்டு ராஜா, லோகுராஜ், ராம மணிவேல், கூத்தரசன் டைலர், சக்திவேல், மணியாங்குட்டை கண்ணன், பூபதி, திருமானூர் கரும்பாயிரம் உள்படபலர் பங்கேற்றனர்,

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை வீதி–100 நிகழ்வையொட்டி காணொலி வழி மாணவர் கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்படுகிறது

**புதுக்கோட்டை-செப்.13**

புதுக்கோட்டை "வீதி" கலை-இலக்கியக் களம் அமைப்பின் 100ஆவது நிகழ்வை ஒட்டி, பள்ளி-கல்லூரி மாணவ மாணவியர்க்கு, காணொலி வழிகலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன 6ம் வகுப்பு முதல் 8வகுப்பு மாணவமாணவியர்க்கு இசைப் போட்டி விழிப்புணர்வுப் பாடல் எதுவாயினும் மூன்று மணித்துளி அமைய வேண்டும். குரலிசை, கருவியிசை ஏதேனும் ஒன்றில் பங்கேற்று, திறமையைக்காட்டலாம். 9 மற்றும் 10 வகுப்பு மாணவ-மாணவியர்க்கு பேச்சுப் போட்டி மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு, எழுத்தாளர் அகிலன் பிறந்த நூற்றாண்டு இரண்டில் ஒரு தலைப்பில் மூன்று மணித்துளி அளவில்பேசி அனுப்ப வேண்டும்

11மற்றும்12வகுப்பு மாணவ-மாணவியர்க்கு நூல்அறிமுகப் போட்டி படித்த நூல் ஒன்றின் சிறப்பு பற்றி மூன்று மணித்துளி அளவில் பேச வேண்டும். அனைத்துவகைக் கல்லூரி மாணவ-மாணவியர்க்கு திரைப்பட / குறும்பட விமர்சனப் போட்டி

தம்மைக் கவர்ந்த தமிழ்த்திரைப்படம் அல்லது குறும்படம் ஒன்றைப் பற்றிய மூன்று மணித்துளி விமர்சன உரை இடம்பெற வேண்டும்.

போட்டிகளுக்கான விதிகள் பின்வருமாறு-

ஒருவர் ஒரு போட்டி, ஒரு தலைப்பில் மட்டுமே பங்கேற்க முடியும். காணொலி வழியாக மட்டுமே போட்டியாளர்கள் பங்கேற்க முடியும்.

போட்டி மூன்று மணித்துளிக்கும் மிகாமல் அமைதல் வேண்டும்.போட்டிக் காணொலியின் ஆரம்பத்தில், போட்டியாளர்கள் தனது பெயர், தான் பயிலும் பள்ளி / கல்லூரி, மற்றும் ஊர் விவரங்களைச் சொல்லிய பின்னரே போட்டிக்கான காணொலிப் பதிவைத் தொடங்க வேண்டும்.

வெற்றிபெற்றவர்க்குத் தனித்தனியாகவும், செய்தித்தாள் வழியாகப் பொதுவாகவும் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும்.

இப்போட்டி புதுக்கோட்டை வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்டது. (மாவட்டத்தில் இருப்பவராக அல்லது படிப்பவராக இருத்தல் வேண்டும்) நடுவர்கள் முடிவே இறுதியானது. காணொலி 25-9-2-22 ஞாயிறுமாலை5மணிக்குள் வந்து சேரவேண்டும்

அனைத்துவகைக் காணொலிப் போட்டிப் படைப்புகளையும் அனுப்ப வேண்டிய புலன (வாட்சாப்) செல்பேசி எண் கவிஞர் விஜய்ஆனந்த் +91 97917 57087 இதற்கான பரிசுகள், வரும் அக்டோபர் 1ஆம் தேதி சனிக்கிழமை அன்று நடக்கவுள்ள, "வீதி" 100ஆவது முழுநாள் நிகழ்வில், புதுக்கோட்டை-மதுரை நெடுஞ்சாலையில் உள்ள வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் எழுத்தாளர் பெருமாள்முருகன், தமிழறிஞர் நா.அருள்முருகன், தமுஎகச மாநிலத் தலைவர் மதுக்கூர் ராமலிங்கம் ஆகியோரால் வழங்கப்படும் என வீதி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கவிஞர் மு.கீதா, எழுத்தாளர் நா.முத்துநிலவன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# அரியலூரில் எல்ஐசி முகவர்கள் சங்கம் லிகாய் சார்பில் ஆர்ப்பாட்டம்




அரியலூர்,செப்.13–

அரியலூரில் எல்ஐசி முகவர்கள் சங்கம் லிகாய் சார்பில், அரியலூர் எல்ஐசி கிளை அலுவலகம் முன்பு, சிஐடியு சார்பு அமைப்பான லிகாய் சார்பில் நடைபெற்ற, கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு, அரியலூர் கிளைத்தலைவர் என்.நீலமேகம் தலைமை வகித்தார். ஜெயங்கொண்டம் தலைவர் பி.ஆறுமுகம் வரவேற்று பேசினார்.

எல்ஐசி - ஐ காப்போம், முகவர்களை பாதுகாப்போம். 1956 முதல் நடைமுறையில் உள்ள, எல்ஐசி முகவர்களுக்கான கமிஷன் தொகையை, அதிகப்படுத்த பரிந்துரைக்காமல், கமிஷன் குறைப்புக்காக பரிந்துரை செய்துள்ள, ஐஆர்டிஏ நிர்வாகத்தை கண்டிப்பது, பெட்ரோல், டீசல், கேஸ் உள்ளிட்ட, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய எல்ஐசி முகவர்கள் சங்கம் லிங்காய் நடத்தும், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாநிலச்செயலாளர்ராஜா சிறப்புரையாற்றினார்.

சிஐடியு மாவட்ட செயலாளர் துரைசாமி, லிகாய் நிர்வாகிகள் அருமை கண்ணு, பாலசுப்பிரமணியன், முருகானந்தம், முருகேசன், ராஜா, வெங்கடகிருஷ்ணன், ராஜேந்திரன், கணபதி, சிவக்குமார் பர்ணபாஸ், ராமலிங்கம், பாண்டியன், கரிகால்வளவன், ரவி, செல்லமுத்து, வெங்கடேசன், குமரேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் கிளை பொருளாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

# உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலகத்திற்கு பூட்டு போட்டு போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்



கள்ளக்குறிச்சி, செப்,13_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உளுந்தூர்பேட்டைமற்றும் அதனை சுற்றியுள்ள 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் உளுந்து, நெல், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, உள்ளிட்ட உணவு தானியங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக தொடர்ந்து விற்பனை செய்து வந்த விவசாயிகளின் விலை பொருட்களுக்கான தொகை 80 லட்சம் ரூபாயை ஒழுங்குமுறை விற்பனை கூட நிர்வாகம் மற்றும் வியாபாரிகளும் விவசாயிகளுக்கு பணம் வழங்காமல் தொடர்ந்து ஏமாற்றிவந்தனர். இந்த நிலையில் இதுகுறித்து தொடர்ந்து அரசு அதிகாரிகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் தகவல் தெரிவித்தும், விவசாயிகளுக்கு பணம் வழங்காமல் இழுத்தடிப்பு செய்து வருவதாக கூறப்படுகிறது, மேலும் விவசாயிகளுக்கு தரவேண்டிய பணத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வலியுறுத்தியும் பல்வேறு போராட்டங்களை விவசாயிகள் நடத்தியும் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய பணம் வழங்காததால் ஆத்திரமடைந்த விவசாயிகள் நேற்று உளுந்தூர்பேட்டை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் பணி செய்யும் ஊழியர்களை அலுவலகத்தின் உள்ளே வைத்து பூட்டு போட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்தகவல் அறிந்து விரைந்து வந்த காவல்துறையினர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு போடப்பட்ட பூட்டை திறந்து உள்ளே இருந்த ஊழியர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர், பின்னர் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 80 லட்சம் நிலுவை தொகையை, உயர் அதிகாரிகளிடமும் வியாபாரிகளிடம், பேசி சீக்கிரம் கொடுக்கப்படும் என தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டனர், இச்சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



திருச்சிராப்பள்ளி மாவட்ட கலெக்டரகத்தில் செப்டம்பர் மாதம் முழுவதும் தேசிய ஊட்டசத்து மாதவிழா கொண்டாடப்படுவதை முன்னிட்டு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் சார்பில் பொது மக்களுக்கிடையே ஊட்டசத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சக்தி மற்றும் வளர்ச்சித் தரும் உணவுகள் அடங்கிய ஊட்டசத்து கண்காட்சியை மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் நேற்று துவக்கி வைத்து பார்வையிட்டு குழந்தைகளுக்கு ஊட்டசத்து மிக்க உணவுகளை வழங்கி அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட திட்ட அலுவலர் ரேணுகா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தேசிய கல்வி கொள்கையை அரசியலாக்க வேண்டாம்

## தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் பேட்டி



திருச்சி , செப்.13–

தெலுங்கானா மாநில ஆளுநர் தமிழசை சௌந்தராஜன் திருச்சியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியுள்ளதாவது:

தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அந்த கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆரம்ப கட்ட பணிகள் தொடங்கி உள்ளன.

தேசிய கல்வி கொள்கையில் குறைபாடுகள் இருந்தால் அதை அரசிடம் சுட்டிக் காட்டலாம். அதைஏற்றுக் கொள்ளமாட்டேன்என்று சொல்வது சரியானதாக இருக்காது. தேசிய கல்விக் கொள்கையை அரசியலாக்கவேண்டாம் என்றேநான்சொல்கிறேன்.

அனைவருக்கும் ஒன்றுபட்ட சமச்சீர் கல்வி கிடைக்கவேண்டும் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். அகில இந்திய தேர்வுகளை எதிர்கொள்ள மாணவர்களை தயார் செய்வது அவசியம். தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களும் பெற்றோர்களும் தேசிய கல்விக் கொள்கை குறித்து கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

அதை முழுவதும் படித்து விட்டு எதனால் மறுக்கிறீர்கள் என்று கருத்து சொல்ல வேண்டும். மூன்றாம் மற்றும் ஐந்தாம் வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு நடத்துவது குறித்து குழு அமைக்கப்பட்டு, ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவர்களிடம் கருத்துக் கேட்கப்பட்ட பின்னரே முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது பள்ளி குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. மூன்றாம் மற்றும் ஐந்தாம் வகுப்பு படிக்கும் பள்ளிக் குழந்தைகள் தேர்வு எழுத தயாராக இருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.89.11 லட்சம் மதிப்புள்ள தங்கம் பறிமுதல்

## சுங்கத்துறையினர் நடவடிக்கை




சென்னை, செப்,13_

சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு துபாயிலிருந்து கடந்த 07.09.2022 அன்று வந்த இன்டிகோ விமானத்தின் முன்பக்க கழிவறையின் டிஷ்யூ வைக்கும் தட்டின் பின்புறம், பசை வடிவில் மறைத்து வைத்திருந்த 740 கிராம் தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அதன் மதிப்பு ரூ.33.15 லட்சம் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேபோல், 09.09.2022ல் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து எமிரேட்ஸ் விமானத்தில் வந்திறங்கிய அஷ்பேக் ஹாசனை, சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது அவரது மலக்குடலில் பசை வடிவில் பதுக்கி வைத்திருந்த தங்கம், மற்றும் உள்ளாடையில் மறைத்து வைத்திருந்த தங்கச்சங்கிலி ஆகியவற்றை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். 1,249 கிலோ எடைக்கொண்ட அவற்றின் மதிப்பு ரூ.55.96 லட்சம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு சோதனைகள் மூலம் மொத்தம் ரூ.89.11 லட்சம் மதிப்பிலான, 1.989 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாகவும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் சென்னை சர்வதேச விமான நிலைய சுங்கத்துறை இணை ஆணையர் எம்.மேத்யூ ஜோலி குறிப்பிட்டுள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



அரியலூர் செப்-13

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், "மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் பெ.ரமண சரஸ்வதி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 251 மனுக்கள் மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர், இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறைத் திட்ட இயக்குநர் சு.சுந்தர்ராஜன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்ட அலுவலர் சிவக்குமார் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்

# நீலகிரி மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் முன்னேற்றம் குறித்து கலெக்டர் சா.ப.அம்ரித் ஆலோசனை



நீலகிரி, செப். 13

நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில்ஒவ்வொரு துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து, அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் கலெக்டர் சா.ப.அம்ரித் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது:--

தமிழக அரசு பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது.

ஒவ்வொரு துறையின் வாயிலாக அரசால் அறிவிக்கப்படும் திட்டங்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தெரிந்து கொள்வதோடு, அதனை சிறப்பான முறையில் செய்து முடிக்கவேண்டும்.

குறிப்பாக பொதுமக்கள் அடிப்படை வசதிகள் குறித்து மனுக்கள் ஏதேனும் பெறப்பட்டால் அதன் மீது உடனடியாக நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும். என கலெக்டர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்

ஜெயராமன், குன்னூர் சார் ஆட்சியர் தீபனா விஸ்வேஷ்வரி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) தனப்பிரியா உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மரக்காணம் கலவரம்: பாலத்தை சேதப்படுத்திய வழக்கு

# பாமக இழப்பீடு தர தேவையில்லை உயர்நீதிமன்றம் உத்தரவு!



விழுப்புரம், செப்,13_

சித்திரை திருவிழா நிகழ்ச்சியின்போது பாலத்தை சேதப்படுத்தியதாக ரூ.18 லட்சம் இழப்பீடு கேட்டு பாட்டாளி மக்கள் கட்சிக்கு தமிழ்நாடு அரசு அனுப்பிய நோட்டீஸை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வன்னியர் சங்கம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி இணைந்து கடந்த 2013ம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் சித்திரை திருவிழா நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள வந்த பாமக-வினர் காவல்துறை அனுமதியை மீறி மரக்காணம் அருகேயுள்ள கட்டயம் தெரு என்ற பகுதிக்குள் நுழைந்து அங்கிருந்த தலைவர்களின் சிலைகள் மற்றும் ஓடை பாலம் ஆகியவற்றை சேதப்படுத்தியதாக பாமக நிறுவனர் ராமதாஸ் உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்டோர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும், புதுச்சேரி - மைலம் சாலை, கரசனூரில் உள்ள பாலம் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் விசாரணைமேற்கொண்ட தமிழ்நாடு வருவாய் நிர்வாக ஆணையர், ரூ. 18 லட்ச இழப்பீடாக அரசுக்கு செலுத்த வேண்டுமென பாமக நிறுவனர் ராமதாஸ்-க்கு நோட்டீஸ் அனுப்பினார். இந்த நோட்டீசை ரத்து செய்யக்கோரி பாமக-வின் அப்போதைய தலைவர் ஜி.கே. மணி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

அதில் கலவரம் தொடர்பாக அடையாளம் தெரியாத நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் சேதப்படுத்தியதாக கூறி நோட்டீஸ் அனுப்பியது தவறு என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபானி முன்பு விசாரணைக்கு வந்த போது, பாமக இழப்பீடு செலுத்தக்கோரி நோட்டீஸ் அனுப்புவதற்கு முகாந்திரம் இல்லை எனக்கூறி நோட்டீசை ரத்து செய்து உத்தரவிட்டார்.

# திண்டுக்கல் கொடைரோடு மெட்டூர் பாலம் அருகே விபத்து வழக்கறிஞர் உள்ளிட்ட இருவர் பலி







திண்டுக்கல், செப்,13_

திண்டுக்கல் கொடைரோடு மெட்டூர் பாலம் அருகே நடந்த சாலை விபத்தில் வழக்கறிஞர் உள்ளிட்ட இருவர் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாத்தூரை சேர்ந்த வழக்கறிஞர் மைக்கேல் பாரதி மற்றும் அவரது ஜூனியர் வழக்கறிஞர் மோனிகா ஆகியஇருவரும் சேலம் கோர்ட்டில் ஒரு வழக்கிற்காக சென்று விட்டு சாத்தூரை நோக்கி திரும்பி கொண்டிருந்தனர். திண்டுக்கல் கொடைரோடு மெட்டூர் பாலம் அருகே அவர்களின்கார் வந்து கொண்டிருந்தபோது நிலைத்தடுமாறி சாலை சென்டர் மீடியனில் மோதி கார் எதிர்ப்புறம் சாலையில் உருண்டோடியது.

இதில் ஜூனியர் வழக்கறிஞரான மோனிகா என்பவர் சம்பவ இடத்திலேயே பலியானார். கார் ஓட்டுநர் அசோக் குமார் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் பலியானார். மைக்கேல் பாரதி சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இச்சம்பவம் குறித்து அம்மைநாயக்கனூர் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



# ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு சீன அதிபர், பாக் பிரதமரை சந்திக்கிறார் மோடி

# அதிமுக அலுவலக சாவி ஓபிஎஸ் மனு தள்ளுபடி





# மின் கட்டண உயர்வை கண்டித்து 16ஆம் தேதி அதிமுக ஆர்ப்பாட்டம்


சென்னை / புதுக்கோட்டை | 13.09.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

புதுவை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

முு. நல்லதம்பி , ஈழத்துத் தமிழறிஞர், புலவர் (பி.1896) (இ.1951)



கோ. சி. மணி , தமிழக அரசியல்வாதி (பி.1929) (இ.2016)



சி. தர்மகுலசிங்கம் , ஈழத்து எழுத்தாளர், இதழாசிரியர் (பி.1947) (இ.2011)



கார்த்திக் , தென்னிந்திய நடிகர் (பி.1960)



## இன்றைய சிறப்பு நாள்

கு. சேசாத்ரி ஐயர் , இந்திய வழக்கறிஞர், மைசூர் திவான் (பி.1845) (இ.1901)



ஆர். சூடாமணி , தமிழக எழுத்தாளர் (பி.1931) (இ.2010)



ரங்கநாத் மிஸ்ரா , இந்தியாவின் 21-வது தலைமை நீதிபதி (பி.1926) (இ.2012)

